

பா.ராகவன்

131

# மாய வலை

சர்வதேசத் தீவிரவாதம் பற்றிய திகிலூட்டும் தொடர்

மே 16, 1995. அணுகுண்டு வீசப்பட்ட தேதிக்கு அப்புறம், ஜப்பானியர்களால் மறக்கவே முடியாத தேதி. அன்றைக்குத்தான் நமது கதாநாயகன் ஷோகோ அசஹாரா காவல்துறையிடம் பிடிபட்டார்.

ஒரு தனி மனிதர். தேசத்தை ஆளும் விருப்பம் இருந்தது. அரசியல் வழியே மக்களைச் சென்றடைவதில் தடை, தாமதங்கள், விபத்துகள் உண்டாகலாம் என்று நினைத்து ஆன்மிகத்தைத் தன் வழியாகத் தேர்ந்தெடுக்கிறார். சகட்டுமேனிக்குப் பித்தலாட்டங்கள். அந்தத் தாடி மயிர் தாயத்து நினைவிருக்கிறதல்லவா? அது ஒன்று போதுமே? தனி இயக்கம், தனி மதம், ஊரெல்லாம், உலகெல்லாம் பக்தர்கள். மேலுக்கு ஆன்மிகம். உள்ளுக்குள் அயோக்கியத்தனம். விஷவாயு, வெங்காய வெடி, உயிரியல் ஆயுதங்கள்.

எத்தனை ஆண்டுகளாகத் தீட்டப்பட்ட திட்டம்! ஒரு தனி மனிதனின் விருப்பத்துக்கு ஒரு தேசமே உடன்பட்டு, கட்டுண்ட நாகம் மாதிரி அவர் பின்னால் சுற்றிய காலத்தை இப்போது நினைத்துப் பார்த்தால், நம்புவது கொஞ்சம் கஷ்டமாகக் கூடத் தோன்றலாம். நமக்கல்ல; ஜப்பானியர்களுக்கே!

ஆனாலும் அப்படித்தான் இருந்தது நிலைமை. இறுதியில் தனது ஆசிரமம் ஒன்றின் காம்பவுண்டு சுவருக்கு அருகே ரகசியமாகத் தோண்டப்பட்ட சுரங்க அறையில் பதுங்கியிருந்த ஷோகோவை செத்த எலியைக் கொண்டுவருவது மாதிரி மேலே கொண்டுவந்து போட்டுவிட்டார்கள். அந்தக் கட்டடத்துக்கு கமிகுஷிகி (Kamikuishiki complex) என்று பெயர். கவனமாக அந்தக் கட்டடத்தின் உள்ளே பதுங்காமல், காம்பவுண்டு சுவரோரம் வளர்ந்திருந்த ஒரு பெரிய மரத்துக்கு அடியில் குழி தோண்டிப் பதுங்கியிருந்தார் ஷோகோ. படு ப்ரில்லியண்டான யோசனை அது. காம்பவுண்டுக் கதவைத் திறந்ததும் நேரே உள்ளேதானே போவார்கள்? யாருக்கு சுவர் ஓரங்களையும் ஆராயவேண்டும் என்று தோன்றும்?

ஆனால், அதிர்ஷ்டவசமாக உள்ளே நுழைந்த காவலர்களுள் ஒருவரை அப்போது இயற்கை அன்னை அழைக்க, அந்த மரத்தடிப் பக்கம் தனியே போனார். குறிப்பிட்ட இடத்தில் கால் வைத்தபோது, என்னவோ மாதிரி இருக்கிறதே என்று சந்தேகப்பட்டு காலால் குப்பையைத் தள்ளிப் பார்த்தால், அங்கே ஒரு சொர்க்கவாசல்!

ஷோகோ கைதான விஷயம் காட்டுத் தீ போல் ஜப்பான் முழுதும் பரவியது. தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் அனைத்தும் உடனடியாக நிறுத்தப்பட்டு, இந்தச் செய்தியே திரும்பத் திரும்ப ஒளிபரப்பப்பட்டது. மாலைப் பத்திரிகைகள் ஸ்பெஷலாக ஒரு மத்தியான எடிஷன் போட்டன. காலைப் பத்திரிகைகள் மறுநாள் வரை பொறுத்திருக்க வேண்டிய விதியை நொந்துகொண்டன. காவல்துறைத் தலைவர் அலுவலகத்தைச் சுற்றி ஆயிரக்கணக்கான மக்கள்.

ஷோகோவை எங்கே கொண்டு போகப்போகிறார்கள் என்பது சஸ்பென்ஸாகவே இருந்தது.

(கடைசிவரை சொல்லவில்லை.)

முன்னதாகவே, எதற்கும் இருக்கட்டும் என்று நீதிமன்றத்தில் மனு கொடுத்து, எந்தக் கணமும் அழைத்து வந்து ஆஜர்படுத்த அனுமதி பெற்றிருந்ததால், கைதான அன்று இரவே நீதிபதியின்முன் கொண்டுபோய் நிறுத்திவிட்டார்கள். இரண்டு நிமிட பூர்வாங்க விசாரிப்பு. என்ன கேஸ்?

நேரடியாக 27 கொலைகளில் முதல் குற்றவாளி. 13 சமூக விரோத நடவடிக்கைகளில் முதல் குற்றவாளி. தவிரவும் இருக்கவே இருக்கிறது அந்த சப்வே விஷவாயு வழக்கு. அதன் மூளையே, அருமை அண்ணன்தான் அல்லவா?

இவையெல்லாவற்றுக்கும் மேலாக, ஷோகோ மீது சுமத்தப்பட்ட ஒரு குற்றச்சாட்டு மிகவும் முக்கியமானது. தேசத்தில் குழப்பம் விளைவித்து ஜப்பானிய மன்னரைக் கொன்று அல்லது அகற்றிவிட்டு ஜப்பானின் மன்னராகத் தன்னை முடிசூட்டிக் கொள்ளத் திட்டமிட்டு அதற்காகவே சதித்திட்டம் தீட்டி வந்தார் என்பது.

ஜப்பானில் மன்னர் என்பவர் கடவுளுக்கு அடுத்தபடி அல்ல. கடவுளே அவர்தான். இரண்டாம் உலகப்போரின் இறுதியில் ஜப்பான் தோற்றபோது, மன்னரின் ஆட்சியைக் காப்பாற்றமுடியவில்லையே என்று கதறிய பல ராணுவ அதிகாரிகள், தம் வயிற்றில் தாமே கத்தியால் குத்தி, கிழித்துக் கொண்டு உயிரை விட்டிருக்கிறார்கள் என்பது சரித்திரம்.

மிகவும் சென்சிடிவ் ஏரியா அது. ஷோகோ அந்த அடிப்படையையே அசைத்துப் பார்க்க நினைத்தார் என்பதால் வழக்கில் வாய்தா, ஜாமீன் எல்லாம் சாத்தியமே இல்லாது போயிற்று. பிடித்துக் கொண்டுபோய் உள்ளே தள்ளிக் கதவைச் சாத்திவிட்டார்கள்.

ஷோகோ கைதான அன்றே அவரது அடிப்பொடிகள் ஜப்பானில் கடும் குழப்பம் விளைவிக்கப் பார்த்தார்கள். எப்படியாவது தேசத்தில் அவசரநிலைப் பிரகடனம் செய்ய வைத்துவிட வேண்டும் என்பதே அவர்களது குறிக்கோளாக இருந்தது.

முதல் காரியமாக டோக்கியோவின் கவர்னரான யுகியோ யோஷிமாவின் (Yukio Aoshima) அலுவலகத்துக்கு ஒரு பார்சல் பாம் அனுப்பினார்கள். கிட்டத்தட்ட சினிமா மாதிரியே நடைபெற்ற சம்பவம் அது.

அந்த கவர்னர், தனக்கு வரும் கடிதங்களைத் தானே பிரித்துப் படிக்கிற வழக்கம் உள்ளவர். எனவே, அவருக்கு என்ன வந்தாலும் நேரே அவர் டேபிளில் வைத்து விடுவார்கள். அப்படி இந்த பார்சலும் அவரது டேபிளில் வைக்கப்பட்டிருந்தது.

கவர்னர் லஞ்சுக்குப் புறப்படுவதற்குச் சரியாக ஐந்து நிமிடங்கள் முன்னால் வந்த பார்சல் அது.

எடுத்துப் பிரிக்கப் போனவர், என்னவோ தோன்றி தன் செகரட்டரியிடம், 'மாலை வந்து பார்த்துக் கொள்கிறேன்' என்று சொல்லிவிட்டு கைகழுவ நகர்ந்தார்.

'நான் எல்லாவற்றையும் பிரித்து வைத்துவிடுகிறேன் சார்' என்று சொல்லியபடியே, பார்சலை அந்த செகரட்டரி பிரிக்க, வெடித்துவிட்டது.

அதிர்ஷ்டவசமாக உயிர் போகவில்லை. வெடித்த அதிர்ச்சியில் அவர் கைகளை விசிற, குண்டுக்காயம் விரல்களோடு போயிற்று. (சில விரல்களும் போயிற்று.)

எதிர்பார்த்த விளைவு ஏற்படாத கோபத்தில், தம் பழைய உத்தியான கெமிக்கல் ஆயுதங்களையே

மீண்டும் பிரயோகிக்கலாம் என்று முடிவு செய்தது ஷோகோவின் லெஃப்டினண்ட் கோஷ்டி. ஆனால், ஆசிரமங்கள் அனைத்தும் காவல்துறையின் கட்டுப்பாட்டில் இருந்தன. சீல் வைக்கப்பட்டிருந்தன. எனவே, புதிதாக ரசாயன ஆயுதங்களை உற்பத்தி செய்தால்தான் உண்டு. ஆய்வகம் இப்போது கிடையாது. ஒரு அபார்ட்மெண்டை வாடகைக்கு எடுத்து சாராயம் காய்ச்சுவது மாதிரி கெமிக்கல் காய்ச்ச ஆரம்பித்து ஒரு கோஷ்டி மாட்டிக்கொண்டது.

எனவே, எளிதாகச் செய்யக்கூடிய ரசாயன ஆயுதம் எதுவென்று யோசித்து, இறுதியில் சல்ஃபூரிக் ஆசிடையும் சோடியம் சயனைடையும் இரண்டு தனித்தனி பைகளில் நிரப்பி, ஒன்றோடு ஒன்று சேரும் விதத்தில் நெருக்கமாக ஓர் ஓட்டை மட்டும் போட்டு இரண்டையும் இறுகக் கட்டி எடுத்துச் சென்று, நாலைந்து இடங்களில் வைத்துவிட்டுப் போய்விட்டார்கள்.

கெமிக்கல் வேலை செய்திருந்தால் கண்டிப்பாக விபரீதம். அதிர்ஷ்டவசமாக இரண்டு பைகளுக்கு இடையில் போடப்பட்டிருந்த ஓட்டையில் ஏதோ அடைத்துக்கொண்டுவிட்டதால் அசம்பாவிதம் ஏதும் நேராமல் தப்பித்தது. காவல்துறையினர் அந்தப் பைகளைக் கண்டறிந்து அப்புறப்படுத்தினார்கள்.

இதனிடையில், ஷோகோவின் ஆசிரமத்து சொத்துகளைப் பாதுகாப்பாக பத்திரப்படுத்தும் பணிகள் துரிதமடைந்திருந்தன. உண்மையில் அவரது ஒரு பில்லியன் டாலர் சொத்தில் மூன்றில் ஒரு பங்கு அளவுக்கே காவல்துறை கைப்பற்றியிருந்தது. பணமாகவும் தங்கப் பாளங்களாகவும் ஷோகோ பல்வேறு இடங்களில் பதுக்கி வைத்திருந்தவை குறித்த விவரங்கள் இயக்கத்தில் மிகச் சிலருக்கு மட்டுமே தெரியும்.

அவர்களில் பலர் கைதாகிவிட்டிருக்க, வெளியில் ரகசியமாகத் திரிந்து கொண்டிருந்த மூன்று அல்லது நான்கு பேர் சேர்ந்து அந்தப் பணத்தை ரகசியமாக வெளிநாடு எதற்காவது அனுப்பி பத்திரப்படுத்தும் முயற்சியில் இறங்கினார்கள். எங்கே, யாருக்கு அனுப்பலாம், எப்படி அனுப்பலாம் என்பது குறித்து சிறையில் இருக்கும் ஷோகோவிடம் கருத்துக் கேட்க மிகவும் முயற்சி செய்து பார்த்தார்கள். ஆனால் ஷோகோ, எந்த இடத்தில் சிறைவைக்கப்பட்டிருக்கிறார் என்கிற விவரமே வெளியில் தெரியாமல் இருந்தது. உண்மையில், காவல் துறையினரிலேயே பலருக்கு அப்போது அந்த விஷயம் தெரியாது.

அத்தனை ஜாக்கிரதை உணர்வு. ஏனெனில் காவல்துறை, சிறைத்துறை, நீதித்துறை என்று அத்தனை இடங்களிலும் அவருக்கு அப்போது பக்தர்கள் அல்லது அனுதாபிகள் இருந்ததுதான்.

ஒன்று சொல்லவேண்டும். ஷோகோ அசஹாரா வழக்கு விசாரணைக்கு மேற்கொள்ளப்பட்ட பாதுகாப்பு ஏற்பாடுகளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் இருபதாம் நூற்றாண்டின் மிகச் சிறந்த வழக்கு விசாரணை என்கிற பெயரை அதற்குப் பெற்றுத் தந்தது. தருமத்திலிருந்து அரை அங்குலம் கூட நகராத வழக்கு என்று பின்னாளில் அத்தனை மேற்கத்திய ஊடகங்களும் புகழ்ந்து பாராட்டிய வழக்கு அது.

ஒவ்வொரு சாட்சிக்கும் நிறைய வாய்ப்பு வழங்கப்பட்டது. தீர்க்கமாக ஒவ்வொரு வழக்கையும் அலசி ஆராய்ந்தது நீதிமன்றம். குற்றவாளிகள் தரப்பைக் கேட்பதிலும் நீதிபதி மிகுந்த அக்கறை காட்டினார். குற்றம் நிரூபிக்கப்படும்வரை யாரும் குற்றவாளிகள் இல்லை என்று வழக்கு நடந்துகொண்டிருந்த நாளில் அடிக்கடி சுட்டிக்காட்டியபடியேதான் இருந்தார்கள்.

கட்சி மாறாட்டம், அந்தர்பல்டி, பொய்சாட்சிகள், பணப்பரிவர்த்தனை என்று எந்தவிதமான கெட்ட சமாசாரங்களுக்கும் இடம் தராமல் ஒன்பது ஆண்டுகாலம் நீடித்த வழக்கின் முடிவில், ஷோகோ அசஹாராவின் மீது சுமத்தப்பட்ட 27 கொலைக் குற்றங்களில் 17 குற்றங்கள் பூரணமாக நிரூபிக்கப்பட்டு, அவருக்குத் தூக்கு தண்டனை விதிக்கப்பட்டது.

அன்றைக்குத் தேதி பிப்ரவரி 27, 2004. ஜப்பானிய நீதித்துறையை உலகமே பாராட்டி மகிழ்ந்தது. ஷோகோவின் பக்தர்கள் மட்டும் ரகசியமாகக் கண்ணீர் விட்டுக்கொண்டிருந்தார்கள்.

அன்றைக்கு மட்டுமல்ல. இன்றுவரை ஷோகோ ஒரு நிரபராதி என்றும், கடவுளின் தூதர் என்றும், எந்தக் குற்றமும் செய்யாதவர் என்றும், அபாண்டமாகப் பழிவாங்கப்பட்டுவிட்டார் என்றும் வருத்தப்பட்டு, இன்றைக்கும் அவரை வணங்கும் பக்தர்கள் இருக்கவே செய்கிறார்கள். நவீன உலகில் தீவிரவாதத்துக்கு ஒரு புதிய பரிமாணம் சேர்த்தவர் என்கிற வகையில் 'ஷோகோபாணி' தீவிரவாதம் குறித்து ஆராய்ச்சி செய்து வால்யூம் வால்யூமாக எழுதித் தள்ளும் மேற்கத்திய ஆய்வாளர்களும் இருக்கிறார்கள்!

மிக நீண்ட வருடங்கள் நடந்து முடிந்த வழக்கில் ஒரே ஒரு இடத்தில் மட்டும் ஒரு சின்னப் பிசிறு அடித்தது. அதையும் சொல்லிவிடவேண்டும்.

ஷோகோவுக்காக எந்தப் பெரிய வழக்கறிஞரும் நீதிமன்றத்தில் ஆஜராக முன்வராத சூழலில், யோஷிஹிரோ யாசுதா என்கிற மூத்த அட்டர்னி ஒருவர் அவருக்காக ஆஜராக முன்வந்து சில வாய்தாக்களிலும் கலந்துகொண்டார்.

ஆனால், அன்றைய தேதியில் ஜப்பானியர்களுக்கு இருந்த மனநிலையில், ஷோகோவுக்காக வாதாடும் வழக்கறிஞரும் குற்றவாளியாகவே பார்க்கப்பட்டார். அவர்மீதும் என்னென்னவோ, குற்றங்களைச் சுமத்தி சிறைக்குத் தள்ளிவிட்டார்கள். அவரது வழக்கறிஞர் அந்தஸ்து பறிக்கப்பட்டு, அவர் இனிமேல் எந்த வழக்கிலும் ஆஜராகக்கூடாது என்று தீர்ப்பாகிவிட்டது.

சில மனித உரிமை அமைப்புகள் இதனை எதிர்த்துக் குரல் கொடுத்தன. விஷயம் பத்திரிகைகளிலும் வந்தன. ஆனால், எல்லாம் வெளிநாட்டுப் பத்திரிகைகள். ஜப்பானியப் பத்திரிகைகள் ஷோகோவின் வழக்கறிஞருக்குச் சாதகமாக எழுந்த குரல்களை எட்டாம்பக்கத்தில் கூடப் பிரசுரிக்க மறுத்துவிட்டன!

இதன் பிறகு, ஷோகோவுக்காக வாதாட நீதிமன்றமே ஒரு வழக்கறிஞரை நியமிக்கவேண்டிய நிலைமை உண்டானது.

தனக்கு விதிக்கப்பட்ட தண்டனையை எதிர்த்து ஷோகோ அப்பீல் செய்தார். இடைப்பட்ட காலத்தில் சிறையில் யாருடனும் பேசாமல் எப்போதும் கண்மூடி தியானத்திலேயே அமர்ந்திருந்தார். எப்படி ஒரு மனிதன் நாள் முழுதும் கண்ணைத் திறக்காமலேயே இருக்கமுடியும் என்று சிறைக்காவலர்கள் வியந்தார்கள். ஆனால், இன்றைக்கு வரைக்கும் ஷோகோ அப்படித்தான் இருக்கிறார்.

செப்டெம்பர் 15, 2006 அன்று ஜப்பான் உச்சநீதிமன்றம் ஷோகோவின் அப்பீலைத் தள்ளுபடி செய்து, அவரது மரண தண்டனையை உறுதிப்படுத்திவிட்டது. ஷோகோ தன் இறுதி தினத்துக்காக இப்போது காத்துக்கொண்டிருக்கிறார்!

ஆனால் ஒன்று. அவரது இயக்கம் முற்றிலும் அழிந்துவிடவில்லை. பல் பிடுங்கிய பாம்புதான் என்றாலும், இப்போதும் இயங்கிக்கொண்டுதான் இருக்கிறது. உபதேசங்கள், போதனைகள், சிறப்பு வகுப்புகள் இத்தியாதி. ஆனால், தப்பித்தவறிக்கூட ஆயுதம் என்று நினைத்துவிட முடியாது.

ரசாயனம் காய்ச்சுவதா? மூச்! உள்ளே பால் காய்ச்சினால்கூட போலீஸ் வந்து அள்ளிக்கொண்டு போய்விடும்!